செ.வெ.எண்.16 நாள்: 08.05.2019

**தூத்துக்குடி மாவட்டத்தில் தொழிற்பழகுநர் தொழிற்தேர்வில் தனித்தேர்வர்களாக விண்ணப்பிக்க அழைப்பு விடுத்தல் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

---

மே/ஜூன் 2019-ல் நடைபெறவிருக்கும் 109-வது அகில இந்திய தொழிற் பழகுநர் தேர்வில், தகுதியுள்ள நபர்கள் மத்திய அரசு வழங்கும் தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ் பெற விரும்பினால், தனித்தேர்வர்களாக கலந்து கொள்ள விண்ணப்பிக்க விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

தொழிற்பயிற்சி நிலையங்களில் பயின்று, ஐடிஐ தேர்ச்சி பெற்று தேசிய தொழிற்சான்றிதழ் பெற்றவர்கள், தொழிற்பழகுநர் சட்டம் 1961-ன் கீழ் தொழிற்பழகுநர் பயிற்சியினை தொழிற்சாலைகளில் முடிக்காதவர்கள், தொழிற்பழகுநர் சட்டம் 1961-ன்படி தொழிற்பழகுநர் பயிற்சி வழங்கும் பட்டியலில் இடம் பெற்ற தொழிற் நிறுவனங்களில் நேரடி பணியாளர்களாக குறைந்தபட்சம் அனுபவம் பெற்றவர்கள், மத்திய அரசு வழங்கும் தேசிய தொழிற்பழகுநர் சான்றிதழ் பெற விரும்பினால் தனி விண்ணப்பதாரராக மத்திய அரசால் நடத்தப்படும் அகில இந்திய தொழிற்பழகுநர் தொழிற்தேர்வில் கலந்து கொள்ளலாம்.

மே 29 முதல் 31 வரை ஆன்லைன் தேர்வு கருத்தியலும், ஜூன் 11 பொறியியல் வரைபடத் தேர்வும், ஜூன் 12 முதல் 14 வரை செய்முறைத் தேர்வும் காலை 9.30 மணி முதல் நடைபெறவிருக்கிறது.

தேர்ச்சி பெற்ற பயிற்சியாளர்களுக்கு மத்திய அரசின் தொழிற்பழகுநர் சான்றிதழ் (என்.ஏ.சி) வழங்கப்படும். மாவட்ட திறன் பயிற்சி அலுவலகம், தூத்துக்குடி, உதவி இயக்குநரை தொடர்பு கொண்டு விபரங்களை அறியலாம்.

தேர்வுக்கான விண்ணப்பங்களை தூத்துக்குடி அரசினர் தொழிற் பயிற்சி நிலைய வளாகத்தில் அமைந்துள்ள, மாவட்ட திறன் பயிற்சி அலுவலக உதவி இயக்குநரை அணுகி, விண்ணப்பத்தினை பெற்று, தட்டச்சு செய்து, விவரங்களை பூர்த்தி செய்து மாவட்ட திறன் பயிற்சி அலுவலகத்தில், அவர்கள் பணிபுரியும் நிறுவனம் வழியாக மட்டுமே சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

தேர்வு கட்டணம் ரூ.200-ஐ கீழ்கண்ட அரசு கணக்குத் தலைப்பில் மாவட்ட கருவூலகங்களில் செலுத்து சீட்டு மூலம் செலுத்த வேண்டும்.

“0230 - 00 - Labour and Employment - 800 other receipts - AC Craftsmen Training Scheme - 27 Non Taxation fees - 13 Examination. (DPC 0230-00-800-AC-2713)” என தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.